# மூன்றாவது இதயம்



JPL
C11149

நாச்சியாதீவு பர்வீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

# மூன்றாவது இதயம்

பொதுசன நூலகம்
14 OCT 2014
யாழ்ப்பாணம்

நாச்சியாதீவு பர்வீன்

111490 C
KOHA JPL

ஜீவநதி வெளியீடு

2014

242244
242245
242244 CC
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மூன்றாவது இதயம்
கவிதைத் தொகுதி
ஜீவநதி வெளியீடு:36

2
811

ஆசிரியர் :
நாச்சியாதீவு பர்வீன்
புதிய நகர், நாச்சியாதீவு

C நாச்சியாதீவு பர்வீன்,

முதற்பதிப்பு : 2014 புரட்டாதி

விலை : ரூபா 250/=

பக்கங்கள் : xxii + 56

அட்டைப்பட வடிவமைப்பு:
க.பரணீதரன்

வெளியீடு :
'ஜீவநதி',
கலைஅகம், அல்வாய்

அச்சுப்பதிப்பு :
பரணீ அச்சகம், நெல்லியடி

Author:
Nachchiyatheevu Farveen
Puthiya Nagar, Nachchiyatheevu
email - armfarveen@gmail.com

Copy Rights: Farveen

First Edition: 2014 September

Cover design:
K.Bharaneetharan

Printed:
Baranee Printers, Nelliady

Publishes:
Jeevanathy, Kalaiaham, Alvai

Price: 250/=

ISBN: 978-955-52526-0-7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

என் இலக்கிய தூண்டிகள்
மர்ஹூம் எம்.எச்.எம்.சம்ஸ்
மர்ஹூம் இப்ராஹிம் - ஆசிரியர்
மர்ஹூம் அஸ்ரப் - விஞ்ஞான ஆசிரியர்
ஆகியோருக்கு

KOHA JPL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஜீவநதியின் 36 ஆவது வெளியீடாக கவிஞர் நாச்சியாதீவு பர்வீனின் "மூன்றாவது இதயம்" கவிதைத் தொகுப்பு வெளி வருகின்றது. நாச்சியாதீவு பர்வீன் ஜீவநதி சஞ்சிகை ஆரம்பித்த காலம் முதல் இன்று வரை "ஜீவநதி" சஞ்சிகையோடும் ஜீவநதி பதிப்பகத்தோடும் நெருங்கிய உறவுடையவர். இளம் கவிஞரான இவர், ஆழ்ந்த இலக்கியப் பரிச்சயம் உடையவர். ஆழ்ந்த வாசிப்பனுவத்தினூடாக இலக்கிய படைப்புக்களை செம்மையாக படைக்கும் சிறப்பு வாய்ந்தவர்.

பர்வீனின் படைப்புக்கள் சமூகத்தின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வந்து அவற்றிற்கு தீர்வு காணும் வழிவகைகளை கூறுபவைகளாக சமூக நோக்கோடு அமைந்த உன்னத படைப்புகள். இவரது படைப்புகளில் நில, மனித நேசிப்பு அதிகமாக காணப்படுவது சிறப்பு. கவிதைக்குரிய பண்புகளோடு கவிதைகளை படைத்து வரும் இளம் படைப்பாளர்களில் பர்வீன் அதீத கவனத்திற்குரியவர். நாச்சியாதீவு என்ற கிராமத்தில் பிறந்த இவர், தன் படைப்புகளால் அந்த கிராமத்துக்கு பெருமை சேர்த்து வருகின்றார். இவரது தொகுப்பில் உள்ள கவிதைகளில் இவரது தெளிந்த இதயத்தை காண முடிகின்றது. வாசகர்களே பர்வீனின் மூன்றாவது இதயம் எதுவென்பதை நீங்களே இத்தொகுப்பினை வாசித்து முடித்ததும் கண்டு கொள்வீர்கள்!

ஜீவநதியின் கவிதைத்தொகுப்புகளுக்கு வாசகர்களிடையே பெரும் வரவேற்பு இருந்து வருகின்றது. இத்தொகுப்பும் வாசகர்களது வரவேற்பைப் பெறும் என்பது தெளிவு. நூலாசிரியர் தொடர்ந்து இவ்வாறான சிறந்து படைப்புகளோடு பயணிக்க வேண்டி வாழ்த்துகின்றேன்.

- க.பரணீதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

## எழில் சிந்தும் இயற்கையின் ஆராத உபாசகன்

நாச்சியாதீவு பர்வீன் கவிதைகளை அச்சு ஊடகங்களில் அவ்வப்போது நான் படித்து வந்திருக்கின்றேன். அந்தக் கவிதைகள் தந்த அனுபவத்தினால் பர்வீன் பற்றிய ஒரு மனப்பதிவு எனது உள்ளத்தில் இருந்து வருகின்றது. அதேசமயம் "மல்லிகை" மாசிகையில் "பேனாவால் பேசுகிறேன்" என இவர் தனது கட்டார் அனுபவங்களை எழுதி வந்த தொடர்கட்டுரைகள் எனது கவனத்தைப் பெரிதும் ஈர்த்தன. இவரை நேரிற் சந்தித்துப் பேசும் வாய்ப்புக் கிட்டாதிருந்த எனக்கு, யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாயில் மாதந்தோறும் நடைபெற்று வரும் "அவை"(Forum) இலக்கியச் சந்திப்பிற் பங்குபற்றுவதற்காக வருகை தந்திருந்த இவர், எனது இல்லத்திலும், "அவை"நிகழ்விலும் என்னைச் சந்தித்த வேளைகளில் இவரோடு பேசுவதற்கு முடிந்தது. இவரது சந்திப்பானது இவர் எழுதும் கவிதைகள் போலவே, இவரும் இருக்கின்றார் என்பது எனது மனதுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது.

இன்று பர்வீனின் "மூன்றாவது இதயம்" கவிதைத் தொகுப்பி லுள்ள கவிதைகளைப் படிக்கையில் இவர் பற்றிய எனது மனப்பதிவினை மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டேன். இவரிடத்தில் தனித்துவமான ஒரு சமூக நோக்கு இருந்து வருகின்றது. இவரது கவிதைமொழியில் எளிமையும் இனிமையும் சிறப்பாகச் செறிந்து கிடக்கின்றன. இயற்கையை உபாசிக்கும் ஒரு கவிஞராகக் காணப்படுகின்றார். மக்களுக்காக எழுதுகின்ற படைப்பாளிகள் மக்கள் விளங்கிக் கொள்ளும் மொழியில் எழுத வேண்டும் என்னும் தெளிவுள்ளவராக இவர் காணப்படுகின்றார். வேண்டிய இடங்களில் மக்கள் மொழியை பேச்சு மொழியைப் பயன்படுத்தி இருப்பது இவர் கவிதைகளுக்கு அழகு ஊட்டுகின்றது.

பர்வீன் இந்த "மூன்றாவது இதயம்" கவிதைத் தொகுதியை இன்று சுவைஞர்களுக்குத் தந்துள்ளார். இந்த நூலின் மகுடமானது விரைந்து நூலினுள்ளே நுழைந்து "அந்த மூன்றாவது இதயம் எது"வெனத் தேடும் வண்ணம் ஆவலைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது. இதயங்களை ஆங்காங்கே தேடும் பர்வீனின் இந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையானது, அதற்கு மேலாகத் தனது பெற்ற தாயையும் பிறந்த மண்ணையும் நேசிக்கும் இவரது மனப்பாங்கினைத் தெளிவுற வெளிப்படுத்துகின்றது. உம்மாவை(அம்மாவை) இழந்து போன ஒரு பிள்ளையின் சோகக் குரலாக அது ஒலிக்கிறது.

"ஒரு மெழுகு திரியாக
உருகி உருகியே
எங்கள் எதிர் காலத்தை
வெளிச்சமாக்க துடித்த
உங்கள் குணம் யாருக்கு வரும்
...........
இந்தப் பொய்யான உலகில்
நான் இழந்த மெய்யான சொத்து
உம்மா நீங்கள் மட்டும்தான்"

(உம்மா எனும் தேவதை)

என பெற்ற அன்னை தன்னை அழித்து, பிள்ளைகளின் வாழ்வினைப் பிரகாசிக்கச் செய்தமை, அந்த அன்னையின் இழப்பில் விளைந்த துயரத்தினைப் பேசுகின்றது.

இலக்கியவாதிகள் சிலர் தமது தந்தையின் பெயருடன், அதாவது தந்தை பெயரின் முதல் எழுத்துடன் தாம் பிறந்த மண்ணின் பெயரின் முதல் எழுத்தினையும் சேர்த்து எழுதும் வழக்கம் நீண்ட காலமாக இங்கும் தமிழ் நாட்டிலும் இருந்து வருகின்றது. உதாரணமாகக் கூறுவதானால் சி.வை.தாமோதரம்பிள்ளையின் பெயரை குறிப்பிடலாம். இவரது பெயரிலுள்ள "சி" என்னும் எழுத்து இவர் பிறந்த சிறுப்பிட்டி என்னும் கிராமத்தைச் சுட்டுகின்றது. இக்காலத்தில் சிலர் தாம் பிறந்த மண்ணின் முழுமையான பெயரைத் தமது பெயருடன் இணைத்துக் கொள்ளுகின்றார்கள். பிறந்த மண் மீதுள்ள பற்றுதல், தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளுதல் கிராமத்தார் ஆதரவு தேடுதல் எனக்குறிப்பிட்ட சில நியாயங்களை முன்நோக்கமாகக் கொண்டு இவ்வாறு செய்கின்றனர். ஆனால் உண்மையில் பர்வீன் பிறந்த மண்ணின் மேல் பற்றுமிகுந்த ஒருவர் என்பதனை இத்தொகுதியிலுள்ள கவிதைகள் உறுதியாகக் கூறுகின்றன. தொகுதி எங்கும் நாச்சியாதீவு விரவிக் கிடக்கின்றது. இயற்கை அழகு செறிந்து கிடக்கிறது. இயற்கை எழிலின் உபாசகனாக விளங்கும் இவரது கவியுள்ளத்தைக் கவர்வதில் புதுமை எதுவுமில்லை. அந்த மண்ணின் மீது கொண்டுள்ள ஆறாத பற்றீர்ப்பினால் "நாச்சியதீவு மான்மியம்" பாடி மகிழ்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னூரின் மான்மியத்தை
எப்படித்தான் சொல்வேனோ
கண் மூடி யோசித்தால்
கன கதைகள் இருக்குது...
பன்வயல் பாசுமடு
படிமையான கிராக்காடு
தொன்மையான கிராமத்தின்
தொடக்கப்புள்ளிகள்
................
மாடுவளர்ப்பில்
எங்களூருக்கு மகத்தான இடமுண்டு
காடு வெட்டி சேனை செய்த
காலமொன்றும் இருந்தது
பாடுபட்டு உழைக்கின்ற
பாட்டாளி மக்கள் தான்
எங்கள் ஊரின்
பாரம்பரிய வாரிசுகள்"

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

ஊரின் இன்னொரு சிறப்பு உழைக்கும் பாட்டாளிகளான விவசாயிகள் "பாரம்பரிய வாரிசுகளாக" வாழ்ந்து வருகின்றார்களெனப் பெருமைப்படுகின்றார், அத்தோடு மீனவரின் கஷ்ட சீவியம் கண்டு மனம் வெதும்புகின்றார். இவர் உள்ளம் உழைக்கும் மக்கள் பக்கம் சார்ந்து நிற்பதனை இக்கவிதைகள் வெளிப்படுத்துகின்றன.

பிறந்த கிராமத்தை நேசிக்கும் இவர் தனது கிராம மக்களின் சிந்தனைப்பாங்கினை இவ்வாறு எடுத்துக் காட்டுகின்றார்:

"தனது வெள்ளிக் கதிர்களை
பாய்ச்சிய வண்ணம்
எங்கள் ஊர்க் குளத்தின்
கிழக்குப் புறமிருந்து....
அவன்
எழுவான்
............
எங்கள் ஊரின்
மேற்குப் புற வயல் வெளியில்
காணாமல் போய் விடுகிறான்"
(சூரியன் பற்றி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளியமரம், நாவல்மரம், முருங்கைமரம் என பல்வேறு மரங்கள் பற்றி, இயற்கையோடு ஒன்றிய இந்தக் கவிஞன் பாடுவது தலைப்புகளின் கீழ் கவிதைகளாக இமையுன் பொழிந்து தள்ளியுள்ளார். நிறைவேறாத காதல் நினைவுகளின் ஆறாத உணர்வுத் தெறிப்புகளாக இந்தக் கவிதைகளை அனுபவிக்கலாம். "மூன்றாவது இதயம்" குறிப்பிட்ட இந்தக் கவிதைகளுள் ஒன்றுதான் மூன்றாவது இதயம் எது? என்பதனை சுவைஞர்கள் படித்து உணர்ந்து கொள்ள வேண்டும். என்பதே எனது விருப்பு.

இயற்கை நிகழ்வுகளைத் தற்குறிப்பேற்றிப் பாடும் சிறப்பு இவரிடத்தில் காணப்படுகின்றன. மழை பொழிந்து பூமியில் விழுந்து நீர் வழிந்து நதியினில் கலக்கும் காட்சியினைத் தனது கற்பனைச் சிறப்புடன் காட்சிப்படுத்துகின்றார்.

"வேட்டைப்பற்கள் கொண்டு
வெறிபிடித்த வானம்
கீறியது
பூமியினை
பூமி கதறி அழுதது
கண்ணீர் எல்லாம்
நதியில் கலந்தன"
(நதியில் மரணம்)

நாச்சியாதீவு பர்வீன் என்ற இந்தக் கவிஞரின் உள்ளக்கொதிப்பு, மன உறுதி என்பவற்றை, "என் எதிரிகளுக்கு..." என்னும் கவிதை இடித்துச் சொல்லுகிறது. எதிரிகளை எச்சரிக்கின்றது. இந்த தொகுதி எங்கும் நாச்சியாதீவு பர்வீன் நிறைந்திருக்கின்றார். தன்னை மறைத்து நின்று கவிதைபாடும் போலித்தனம் இவரிடத்தில் காணப்படவில்லை. பர்வீன் மக்கள் கவிஞர். "ஜீவநதி வெளியீடாக" இந்த கவிதைத் தொகுப்பினை இவர் இன்று தருகின்றார். இந்த நூலினைப் படித்து இவர் காட்டும் சமூகத்தைக் கண்டு கொள்ள வேண்டும். இவர் தொடர்ந்து எழுதி மேலும் உயர்வினைப் பெற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

-தெணியான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதம் நிறைந்த கவிஞன் நாச்சியாதீவு பர்வீன்

"இதயம் அனாதை என்பதற்கு
காதல் சாட்சி சொல்கிறது"
- நா.காமராசன்

புதுக்கவிதை மட்டுமல்ல சிறுகதை நாவல்கள் கூட இலக்கிய மல்ல எனக்கூறும் மலட்டுப்பண்டிதக் கூட்டத்திற்கு முகங்கொடுத்து பழக்கப்பட்டவர்கள் நாங்கள் ஒரு கலைப்படைப்பின் உருவத்தை தீர்மானிப்பது காலமே தவிர ஒரு சிலரின் கருத்துக்கள் அல்ல. புதுக்கவிதையை எதிர்த்தவர்கள் இன்று அதை அங்கீகரிக்கும் நிலைக்கு வந்துவிட்டார்கள். எனவே புதுக்கவிதையாளர்கள் பொறுப்புணர்ச்சியுடன் செயற்படவேண்டும் என்கிறார். மூத்த படைப்பாளியான டொமினிக் ஜீவா

இந்த பொறுப்புணர்ச்சி கவிஞர் நாச்சியாதீவு பர்வீனிடம் காணப்படுவதை நான் இங்கு இதய சுத்தியுடன் பதிய விரும்புகிறேன்.

நாச்சியாதீவு பர்வீனின் கவிதைகளுக்கு இன்னொரு கவிஞனிடம் போய் விளக்கம் கேட்க வேண்டிய அவசியமே இல்லை.

பாடு பொருளின் வீச்சு பழுது படாமல் இவரது கவிதைகள் இதயத்தை தொடுகிறது.

நாச்சியாதீவு பர்வீன் நல்லவன் கவிதை ஞானமுள்ளவன் அன்று பேனாவால் பேசியவன் இன்று இதயத்தால் பேசுகின்றான்.

இதயங்களை இழுத்தெடுக்கும் இங்கிதம் கவிஞர்களுக்கு உண்டு இது இவனிடமும் அதிகமாகவே இருக்கிறது ஏனெனில் இவனது இதயம் எம்மிடம் இருக்கிறது.

கவிஞனாக மேலதிக சலுகை அளவு கடந்த அழுகை இதயத்தில் விழுந்த அடிகள் இவனுக்குள் எழுந்த கவிதை அடிகள். அழகுணர்ச்சிக்கு அடிமையானவர்கள் கவிஞர்கள். அவர்கள் குழந்தை மாதிரி விழுந்தாலும் சமூகம் மன்னிக்கும். உயர்ந்தவர்களின் தூய்மையான எண்ணங்கள் தான் கவிதை வடிவில் வெளிவருகின்றன. எனவே, நாச்சியாதீவு பர்வீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவன் குழந்தை மனசு உள்ளவன்.

நொந்தெழுந்த துயரத்தோடு நாச்சியாதீவு பர்வீன் வந்தெழுதும் கவிதைகள் வாழும்.

மனிதமும் புனிதமும் கிராமத்தின் அடையாளமாகும் காதல் குடும்பம் சமூகம் அரசியல் என கலந்து இவன் படைத்திருக்கும் கவிதைகள் யாவும் காத்திரமானவை; சில ஆத்திரமானவை.

அழுக்குப்பாறையில் கொழுவப்பட்ட தன்னுடைய இதயத்தை கவிதை எனும் அழகுப்பாதையில் வழி நடத்தி வாழ்கின்றான். மர்ஹூம் எம்.எச்.எம்.சம்ஸ் அவர்களின் கவிதை மாணவனாய் ஆனதனால் சமுதாயப்பார்வையுடன் இவன் சத்தியத்தை பாடுகின்றான். நீ எழுதும் கவிதை உன்னை காட்டிக் கொடுக்கும் இதய இன்னலோடு எழுத வந்தவர்கள் எல்லோருமே ஜன்னலோடு சம்மந்தப்பட்டவர்கள்தான் நாச்சியாதீவு பர்வீன் மட்டும் விதிவிலக்கா என்ன?

இவனது கிராமத்துக் கவிதைகளில் நான் கிறங்கிப்போயுள்ளேன் தனது கிராமத்தை நேசிக்கின்ற இவனால் இவனது கிராமம் இன்று உலகறியப்பட்டுள்ளது நேர்மையான போக்குடைய இவனுக்கு எதிரிகள் ஏராளம் இவன் கவிதைகள் அவர்களை எரித்துப் போடும் பேராயுதம்.

நல்ல கவிதைகள் பழைய டயரிகளை எரித்துப்போடும்

பொய்களும் வஞ்சனைகளும் ஜெயிப்பதில்லை ஆனால் நாச்சியாதீவு பர்வீன் உன் கவிதைகள் ஜெயிக்கும் நிலைக்கும்.

**- கிண்ணியா அமீரலி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

## அதனால் நான் இதயமில்லாதவன்

அந்திவானத்தின் அழகும் அதிகாலை வீசும் பனிக்காற்றும் பசுமை பொழியும் வயற்காடும் காலையும் மாலையும் பறவைகளின் ஆலாபனையும் கிராமத்தின் அடையாளங்கள் எத்தனை சொன்னாலும் கிராமத்துக் காற்றின் சுகம் கிராமத்து மக்களின் வெள்ளந்தியான மாசுபடாத மனம் கிராமத்தின் புழுதி மண் வாசம் இப்படி எல்லா வகையான சுகமும் கிராமத்துக்கான அலாதியான பண்பாகும்

நானும் ஒரு கிராமத்தான். மண்குடிசைத் திண்ணையில் உம்மம்மாவின் மடியில் அமர்ந்து கொண்டு கதை கேட்டு வளர்ந்தவன். என் கிராமத்தின் மீதான அளவு கடந்த பாசத்தினால் பினாத்தித் திரிபவன். எல்லோரையும் போலவே இயற்கையை வாசிக்கின்ற பரந்த மனம் உடையவன். அந்த வகையில் எனது அனுபவச் சாளரத்தின் அதிர்வுகளை கவிதையாக்கி உள்ளேன்

எனது பலமும் பலவீனமும் கவிதைதான். முன்னரெல்லாம் எனது கவிதையில் நானே திருப்தி அடைந்த காலமும் உண்டு. இப்போது என்னை நானே மீள்பரிசோதனை செய்கின்ற பொழுது நான் கவிதை எழுதத் தகுதியற்றவன் என்றே தோன்றுகிறது. என்ன செய்ய என் விரல்களுக்கு பழக்கமாகிப்போன எழுத்துக்களை விட்டுவிட்டு நான் ஒதுங்க முடியாதவனாகவே இருக்கிறேன். எனது கவிதைப்பயணத்தின் இயங்கு பாதையில் பல கழுத்தறுப்புக்களை அவ்வப்போது நான் சந்தித்துள்ளேன். பல முறை நொந்து விழுந்து அழுதுள்ளேன். என் கண்களுக்கும் எனக்கும் தெரிந்த ரகசியம் அது.

வேற்றுக்கிரகவாசியைப்போல பல நாட்கள் எல்லாம் துண்டித்தும் வாழ்ந்துள்ளேன். ஆனால் மீண்டும் துளிர்த்து எழுந்து கவிதை படைக்கும் போது கிடைக்கின்ற அங்கீகாரம் பழைய காயங்களை அப்படியே மறக்கடிக்கச் செய்து விடுகிறது

ஒரு நல்ல கவிதை மனத்திற்கு இதம் தருகிறது. வாசகனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுத்து நிறுத்தி கொஞ்சம் சிந்திக்க வைக்கிறது. அடித்தட்டு மக்களின் வாழ்க்கையை பதிந்து அவர்களுக்காக போராட்டம் நடத்துகிறது. பாதிக்கபட்ட சமூகத்தின் குரலாக அது ஓங்கி ஒலிக்கிறது. எழுத்தாளன் காலத்தின் கண்ணாடி என்பதும் எழுத்தாளன் இல்லாத கிராமம் வரலாற்றை இழந்துவிடும் என்பதும் உண்மையிலும் உண்மை என்பதை அந்தக் கவிதை மெய்ப்படுத்தி நிற்கிறது. கவிதை - எனக்கு ஆத்ம திருப்தி அனேகமான கவிஞர்களுக்கு கவிதை வலி நீக்கும் மருந்து.

நவீன கவிதையின் அழகியல் போக்கோடு கைகோர்த்து செல்லவே நான் விரும்புகிறேன். நவீன கவிதையின் இயங்குதளமும் வீச்சும் புதுக்கவிதையாளர்களை புறக்கணிக்க முடியாத அளவுக்கு நிலை நிறுத்தியுள்ளது.

கவிதை - சிரிப்பாய் அழுகையாய் சோகமாய் சந்தோசமாய் இன்னும் காதலாய் எல்லோர் இதயத்திற்குள்ளும் அடங்கிக்கிடக்கிறது அது பகல் வேஷம் போடும் கைதேர்ந்த நடிகர்கள் பலரையும் அடையாளம் காண எனக்கு உறுதுணையாக அமைந்துள்ளது.

என் கவிதைப்பயணத்தில் அருகம்புல்லாய் நான் இருந்தாலும் சில விழுதுவிட்ட ஆலமரங்கள் என்னை எழுதத் தூண்டிக் கொண்டே இருக்கின்றன. குறிப்பாக அன்பு ஜவஹர்ஷா, காப்பியக்கோ ஜின்னா சரிபுதீன், அஸ்ரப் சிஹாப்தீன், டொமினிக் ஜீவா, மேமன் கவி வதிரி.சி.ரவீந்திரன், கெகிராவ சஹானா, கெகிராவ ஸுலைஹா... இவர்களுக்கு எனது நன்றிகள்

தவிரவும் என்கவிதையின் முதல் விமர்சகன் நண்பன் அன்பு அமீன், இந்த தொகுதியை வெளியிட மிகுந்த கரிசனை காட்டிய க.பரணீதரன், முன்னுரை தந்த மூத்த எழுத்தாளர் தெணியான் மற்றும் கிண்ணியா அமீரலி ஆகியோருக்கும் பெயர் சொல்லாவிட்டாலும் என் கவிதையின் வாசகர்களான எல்லா உள்ளத்திற்கும் நன்றிகள்.

யார் அந்த மூன்றாவது இதயம்? அது என் இரண்டாவது மகள் ஸைனப் ஏனெனில் என் முதலாவது இதயம் மனைவி நஸ்மியா இரண்டாவது இதயம் மகள் மரியம்.அதனால் நான் இதயமில்லாதவன்.

- நாச்சியாதீவு பர்வீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசான்களுக்கு ஒரு அஞ்சல்!

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

வெற்றுப்பதர்கள்
வெற்றி பெறவே
நித்தம் உழைக்கும்
நீதவான்கள் நீங்கள்
வெறும் கற்கள் தன்னை சிற்பமாக்கும்...
நுற்பம் தெரிந்த மேதைகள்
அற்பப் புகழில்
ஆணவம் கொள்ளா அறிவு விழுதின்
ஆலமரங்கள்
விட்டில் பூச்சி விளக்கில் விழும்
தொட்டில் பழக்கம்
தொலைப்பவர்கள்.
நல்லவை கெட்டவை
நாளுமறிந்து நாங்கள்
நன்மை செய்ய
நாடுவதும் நீங்கள்தான்
இருட்டுப்பாதையின்
ஒளி விளக்காய்
எங்கள் இதயம் முழுக்க
ஒளி தந்தீர்...!

எத்தனை எத்தனை
உத்தமம் கொண்ட
உன்னத கடமை இது
ஆசான்களே....
பின்னர் ஏன்?
கதிரைக்காக
கலவரம் செய்கிறீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள்
கலகம் செய்கிறீர்கள்
பிச்சை அரசியலின்
பின்னால் சென்று
போஸ்டர் ஒட்டும்
போக்கிரிகளாக மாறியது ஏன்?
கள்ள ஓட்டு போடச்சொல்லி
மாணவனை பழக்கும்
காவாலித்தனத்தை
கற்றுத்தந்தது கல்வி அமைச்சா?
தேசத்தின் கண்களான-நீங்கள்
புண்களாகிய செய்தி கேட்டு
அழுகிறது எங்கள் தேசம்
ஒன்று நிச்சயம்
இலவசக்கல்வியை
இல்லாது ஒழித்த
உங்கள் பணமோகம்
அழியும் ஒரு நாளில்

காறித்துப்பும் மாணவர்கள்
முன்னால் காணாமல் போய் விடும்
உங்கள் கர்வம்
வஞ்சம் கொண்ட
நெஞ்சம் கொண்ட
வாத்தி சிலரின்
வண்டவாளம்
எங்களூரில் தெரிந்தது தான்.
அண்டப் புழுகன்
ஒருவன் பின்னால்
இவர்கள் திரிந்து
மதிப்பு அழிந்ததுதான்.
ஓட்டை விழுந்த
உங்கள் வாழ்வை
முதலில் ஓட்டுங்கள்
ஆட்டைப்போல
மாட்டைப்போல
என்று பிறகு திட்டுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவனின் ஒரு நாள்

காய்ந்து கருத்த உருவம்
காதில ஒரு பீடி
பீத்தல் சாரன்
பின்னால் வளந்த கொண்ட
அளந்தெடுத்த மீசை
அளவா வெட்டிய தாடி.
மீன்கார மீசான் காக்கா
இப்படித்தான் இருப்பார்
காக்காட கதயெண்டால்
கண்ணீர் கததான்.
சோக்காக அவர் சொன்னாலும்
அது சோகக்கததான்....
ஏன்டா தம்பி கேட்கின்றாய்
நாறிய பொலப்பிதுடா?
சாமத்தில போனாலும்
சதம் கூட மிஞ்சிதில்ல
கோழி கூவ முன்ன
கொளத்துக்கு போவோம்ன்டா
மழைபெய்யும் குளிரடிக்கும்
கூதலில காதடைக்கும்

ஆனாலும் என்ன செய்ய
தொழிலுக்கு போனாத்தானே
நண்டும் சிண்டுமான
நாலுக்கும் சாப்பாடு
ஒரு நாள் தொழிலில்லேன்னா
ஓம்மச்சியிட புறுபுறுப்பு
ஒருவனும் கடனும் தரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டக்கி கர்பலா யுத்தம்
தாண்டா தம்பி.
எதிர்க் காத்த எதிர்த்துத்தான்
எம் படக ஓட்டனும்
கல்லுப் பாறைகளில்
முட்டாம பார்க்கணும்..
பாறை இடுக்குகளில்
பக்குவமா எறங்கி
சிக்கிய வலைகளை
பிரித்தெடுக்கும் போது
உயிர் சிலிர்த்து
உறைந்து போகும்டா தம்பி
பத்துக்கிலோ மீன் வந்தா
பங்குக்கு பத்துப்பேருடா
மஹத்தயாவுக்கு ஒரு பங்கு
மந்திரிக்கு ஒரு பங்கு
ஏன்னு கேக்க
எவனுமே இல்லடா
எதித்து கேட்டதுக்கு
ஏன்வலைய தூக்கிட்டாணுக.

பாமர மக்கள் தானே அதுதான்
எங்கள பாடா படுத்துதாங்க
நீ வர வேண்டும்டா தம்பி
எங்கட நிலை பாத்து எழுத.

* கர்பலா யுத்தம் - கர்பலா என்னும் இடத்தில் நடைபெற்ற யுத்தம்

* மஹத்தயா- அதிகாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாச்சியாதீவு மான்மியம்

என்னூரின் மான்மியத்தை
எப்படித்தான் சொல்வேனோ
கண் மூடி யோசித்தால்
கன கதைகள் இருக்குது..
பன்வயல் பாசுமடு
பசுமையான கிராக்காடு
தொன்மையான கிராமத்தின்
தொடக்கப்புள்ளிகள்
முன்னொருநாள்
அரசன் வந்து போன
அடையாளம் சுமந்ததினால்
எங்களூர் மீது அரசாங்கத்திற்கும்
ஒரு கண்ணிருக்கு
பெருக்கு வெட்டையில
பெரிய பெரிய நாவல் மரம்
சறுக்கு கல்லருகில்
சடையாக கூல மரம்
கொளத்து பண்டுல
குடியிருக்கும் புளியமரம்
இதில் வைரவன் இருப்பதாக
பல நூறு சேதி வரும்
நாட்டுப்புரமில்லை
நடு நிலையான ஊரிது
கேட்டுப்பாருங்கள்
தெரிந்தவர்கள் சொல்வார்கள்

மாடு வளர்ப்பில்
எங்களூருக்கு மகத்தான இடமுண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடு வெட்டி சேனை செய்த
கால மொன்றும் இருந்தது
பாடு பட்டு உழைக்கின்ற
பாட்டாளி மக்கள்தான்
எங்கள் ஊரின்
பாரம்பரிய வாரிசுகள்
வானுயர்ந்த மரங்கள்
வடிவான தென்னைகள்
தேன் சுரக்கும் அலைகள்
அதில் தெறித்தோடும் மீன்கள்
சின்னலையும் பெரியலையும்
சிறப்பாக ஓடுது
அது பன்பலையில்
எம்மூரின் சிறப்பைத்தான் பாடுது
பள்ளி முன்றலிலே
பாதை அருகினிலே-பெரும்
வாகை மரமொன்று
ஊரின் வரலாற்றை சொல்லுது
குசவை பாண்டியன்குளம்
அழுத்கொலு மதுரங்குளம்
மூன்றூரை இணைத்துத்தான்
முழுதாக நாச்சியாதீவு
ஏழு குடும்பங்களின்
எச்சங்கள்தான் இன்று
ஆயிரத்து முந்நூறாய்
அதிகரித்து இருக்குது
ஊருக்கு வந்தவரை உபசரித்து அனுப்புவதில்
எங்கள் ஊருக்கு நிகராக
யாருமில்லை என்பேன்.

வாழுந்தோட்டத்து அப்பாவின்
பச்சைக் கபுறடி முந்நூறு ஆண்டுகளை
முழுமையாக கொண்டவையாம்
என்னூரின் மான்மியத்தை
எப்படிச் சொல்வேன் !
கண் மூடி யோசித்தால்
கன கதைகள் இருக்குது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செத்துப்போன காதலின் சாகாத நினைவுகள்

செக்கச் செவந்தவள் தான்
செம்பகப் பூ நிறத்தவள் தான்
வெக்கத்த மூடி வச்ச
வெள்ளரிப் பூ அவள்தான்
தெத்துப்பல்லழகி
தெவிட்டாத சொல்லழகி
சித்தம் கலங்க வைத்த
சிங்காரியும் அவள்தான்
முத்தான கண்ணிரண்டால்
முழு மனசை கொள்ளையிட்டாள்
பித்தாக என்னை - அவள்
பின்னால அலையவிட்டாள்
முத்தாத காதலிது இருந்தும்
மனசெல்லாம் அவளே தான்
சொத்தாக அவள் வந்தாள்
சொர்க்கம்தான் வாழ்வெல்லாம்
வத்தாத நதி போல
வளர்ந்தது என் காதல்
அதற்கு வித்தாக அமைந்தது
ஒரு விளையாட்டுப் போட்டி
பத்தாண்டு கழிந்த பின்னும்
பசுமையாக இருக்கின்ற
தப்பான காதல் பற்றி-மெய்யில்
தவிப்பேதுமில்லைதான்
இப்போதும் நினைவுகளில்
அப்படியே இருக்கிறது
அழியாத காதலின் ஆராத தழும்புகள்.

**நாச்சியாதீவு பர்வீன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி எனும் உயிர்

தவமென்ன நான் செய்தேன்
தாரமாய் உனை அடைய
தறுதலை எனக்குப் போய்
தங்கம் நீ கிடைத்து விட்டாய்
வெற்றுப்பதராக
வெளியுலகில்
நானிருந்தேன்
கற்றுத்தந்தாய் கண்ணே
நீயென் உயிர்தான்
மெத்தப்படிக்கவில்லை
மேதையும் நீயில்லை
இருந்தும்
தப்பாய் திரிந்தவனை
தரம் கண்ட தங்கம் நீ
சித்தம் கலங்கி நான்
சீற்றம் கொள்கையிலே
சிரித்து மொழுகும்
சிங்கார சிற்பி நீ
அற்பன் எனைச் செதுக்கி
அற்புதம் செய்தவளே
வெறும் கல்லைச் சிற்பமாக்கி
நுட்பம் செய்தவளே
தவமென்ன நான் செய்தேன்
தாரமாய் உனை அடைய
தறுதலை எனக்குப் போய்
தங்கம் நீ கிடைத்து விட்டாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலின் கல்வெட்டு

அந்தக்கல்லறையில்
பொறிக்கப்பட்டவை
வெறும்வார்த்தைகள்தான் -ஆனால்
அவனுக்குஅந்தக்கல்லரை
வாசகங்கள் தான் வாழ்க்கை
முப்பது வயதுக்குள் மூப்பு வந்து
அவன் முகத்தில்ஆயிரம் சுருக்கம்
அந்த சுருக்கத்தின் மடிப்புகளில்
அவனது உடைந்து போன
காதலின் உருக்கமான
நினைவுகள் உறங்குகின்றன

படிப்பில் உயர்ந்தவன்
அவனொறு பட்டதாரி
வேலைக்கு விண்ணப்பித்தான்
அவன் விண்ணப்பங்கள்
விசாரிக்கப்படவே இல்லை
தொழிலுக்காக
காத்திருந்துதோற்றுப்போனான்
வாழ்க்கை மீது
அவன் வைத்திருந்தநம்பிக்கை -
மெல்ல கரையத்தொடங்கியது

தேசத்தின் மீதான
பாசத்தினால்
தேசிய ராணுவத்தில்சேர்ந்தான்
அயராத முயற்சி
அலுக்காத பயிற்சி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் பதவியொன்றில்
அவன் உட்கார காரணமாகியது
ஒரு சோதனைச் சாவடி
அவனுக்குபொறுப்பாக
வழங்கப்பட்டது
அது அவனுக்கு வெறுப்பாகப்பட்டது
நாட்களின் நகர்வில்
அந்த புதிய பிரதேசத்தில்
அவன் பதியமாகிப்போனான்
கடமையில் கண்ணாக இருந்த
ஒரு அந்தி மாலையில்
அந்தக்கண்ணழகி
அவன் கண்களில் பட்டாள்
அவள் பார்வையால்
அவன் இதயத்தை தொட்டாள்
பருவத்தின் வாசலில்
நின்றஅந்த பவள நிலா
இவன் இதய வானத்தின்
இனிய நிலவாக இடம் மாறியது
அந்த புன்னகைப் பூவை
மனசுக்குள் புதைத்தான்
அதற்குள்ளே அவனும் புதைந்தான்
மாதத்தின் முடிவில்
இருவரும் மனங்களை
மாற்றிக்கொண்டனர்
அந்த தாவணிக்கிளியை - அவன்
தலையில் வைத்து தாங்கினான்
அவன் நினைவுகளை - அவள்
நெஞ்சில் நிரப்பி தூங்கினாள்

இருவரும் மதத்தால்
வேறு பட்ட போதும்
மனத்தால் ஒன்றாயினர்
பாசைகள்
இருவருக்கும் பரிச்சியமானது
அந்த தமிழ்க் கிளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களத்தில் சிரித்தது
இவன் தமிழிலே குளித்தான்
அந்த யுத்தப்பிரதேசம்
இவர்களால்
முத்தப்பிரதேசமாகியது
தினசரி இருவரும் சந்தித்தனர்
இவர்கள் சந்திக்காத நாட்கள்
இருவருக்குமே
சந்தோசமாக இருந்ததில்லை
போரின் உக்கிரம்
வட புலத்தை
வதைத்து எடுத்தது
அப்பாவி குழந்தைகள்
அப்பாக்களை இழந்தனர்
தப்பாக விழுகின்ற
“செல்” களினால்
தடயம் இல்லாமல் போனது
சில பிரதேசம்

பிறந்து கண் திறக்கு முன்னமே
பல நூறு குழந்தைகள்
ஏனென்று தெரியாமல்
எமலோகம் சென்றனர்.

காணாமல் போனவர்கள்
எண்ணிக்கை
கணக்கில்லாமல் போனது
ஆனாலும் இவர்கள் காதல்
இடையூறு இல்லாமல் தொடர்ந்தது

இலையுதிர் காலத்தின்
நிர்வாண மரங்களையும்
பனித்துளி உறங்கும்
புல்வெளிகளையும்
இடை விடாது
இருவரும் ரசித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நாளும்
யுத்தத்தால் பிரதேசம் சிவந்தது
இருந்தும் இவர்கள்
முத்தத்தால் இருவரினதும்
முகங்கள் சிவந்தன

உக்கிரமடைந்த யுத்தத்தினால்
உறைந்து போனது
அந்தப்பிரதேசம்

தவறி வந்த "செல்" ஒன்று
அவள் குடியிருந்த
குடிசையை பதம் பார்த்தது

அவள் இறந்து போனாள்
அவளது குடும்பம்
வாழ்ந்த சுவடு இழந்து போனது

பாடையில் வந்த
அவள் பிரேதம் கண்டவன்
பித்தனாகிப் போனான்
கத்தினான் கதறினான்
வாய்விட்டழுது ஒப்பாரி வைத்தான்

பொத்தி வைத்த காதல் பூ
பொசுக்கென்று போனது கண்டு
சித்தம் கலங்கிப்போனான்
அவன் - அவனை சுத்தமாய்
மறந்து போனான்

கோலமிடும் அவள்
கைகளை பற்றிய வண்ணம்
காலார நடந்த
கடைசி நாட்களை
அவன் கண்ணீர் துளிகள்
ஞாபகப்படுத்தின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையை
வெறுக்க ஆரம்பித்தான்
தன் காதல் கிளியை
காவு கொண்ட
யுத்த அரக்கனை
வெறுத்தான்

அப்பாவிகளை
கொன்று குவிக்கும்
போரின் பொய் முகம்
அவனுக்கு புலப்பட்டது.

அவள் கல்லறை அருகில்
புல் தரையில்
தனக்கான இல்லறத்தை
அமைத்துக் கொண்டான்

அவன் காதலி
இறந்து போனாள்
ஆனால்
இன்னும் அவன்
காதல் வாழ்கிறது

காதல் சிலருக்கு வார்த்தை
இன்னும் சிலருக்கு
அதுவே வாழ்க்கை
அவனுக்கும் காதலே
வாழ்க்கையாகிப் போனது.

21.2244



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்தம்மா

மூத்தம்மா என்றால்
முழு ஊரும் அறியும்
பார்த்தவர்கள் பட்டென்று
அடையாளம் காண்பார்கள்

முக்காடு போட்டு
தலைய முழுசா மறைச்சி
பண்பாடு மாறாமல்
பயணிப்பா மூத்தம்மா

எத்தின வயசெண்டு
எவருக்கும் சொல்லொண்ணா
எப்படியும் அவவுக்கு
எண்பது இருக்கும்

கொட்டப்பாக்க
பல்லால கடிப்பா
கொழுந்து வெத்திலய
முந்தானையில முடிப்பா
ஒல்லி உருவமெண்டாலும்
அவ நடையில உசார்தான்

ரமழான் காலம்தான்
மூத்தம்மாவின் ராச்சியம்
பன்னால எலச்ச
ஓமல் ஒன்றை எடுத்து
ஊர் ஊரா செல்வதுதான்
மூத்தம்மாவின் வேல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தம்மாவின்
மூத்த மகன் சவூதியில்
கடைசி மகன் கட்டாரில்
இருந்தும் மூத்தம்மாவுக்கு
ஊர் ஊராய் அலைவதிலே
அலாதிப்பிரியம்

மகன்கள் அனுப்பும் பணத்தில
மனுசிக்கு மகராசிபோல
வாழ முடியும் - இருந்தும்
மனுசி கேட்பதில்லை

பரம்பரைத் தொழில் வாப்பா
பட்டுண்ணு விட முடியாது
ஆக மூத்தம்மா
ஊரில திரிவது
பழக்கத்திற்காகவே தவிர
பஞ்சத்திற்காக அல்ல

முன் கொசுவம் வச்ச
சீல உடுத்து
தலயில முக்காடு போட்டு
பன் ஓமல் எடுத்து
யாராவது ஒரு மூத்தம்மா
உங்கள் வீட்டுக்கும் வரலாம்
பழக்க தோசத்தில...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உம்மா எனும் தேவதையே!

உம்மா
உங்கள் நினைவுகளில்
இன்னும் கலங்கித்தவிக்கும்
என் கண்களுக்கு தெரியாது
நீங்கள் திரும்பி வராத செய்தி

உங்கள் அருகாமை
இழந்த பின்னர்தான்
புரிகிறது
உங்களின் அருமை.

ஒரு மெழுகுதிரியாக
உருகி உருகியே
எங்கள் எதிர் காலத்தை
வெளிச்சமாக்க துடித்த
உங்கள் குணம்
யாருக்கு வரும்

இரவும் பகலும்
உங்கள் பிரார்த்தனையின்
சாராம்சம் எங்களின்
நல்வாழ்வு பற்றி
மட்டுமே இருந்தது

உங்களுக்கென்று நீங்கள்
எதையுமே
மிச்சப்படுத்தியதில்லை
நோய்களைத் தவிர...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளி தரும் சூரியனாய்
விழி தந்த நீங்கள்
நினைக்காத
தருணமொன்றில்
நினைவிழந்து
போனீர்கள்

இந்த பொய்யான உலகில்
நான் இழந்த
மெய்யான சொத்து
உம்மா
நீங்கள் மட்டும் தான்.

## கவலை...

தூறல் வானத்தை
இரசித்து மகிழ்ந்த
எனக்கு கவலை தந்தது
உடைந்து போன
தூக்கணம் குருவிக்கூடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்ல மறந்த கதை

கோழி கூவ மறந்த
வைகறை ஒன்றில்
உன்னைப் பற்றிய
எல்லா நினைவுகளையும்
உதறிவிட்டது
மனசு.

நீ எங்கு இருந்தாலும்
சந்தோசமாக
இருக்கவேண்டும் என்ற
என் உள்மன பிரார்த்தனை
பற்றி நீ அறிய வாய்ப்பில்லை
உனது பிரார்த்தனைகள்
எப்படி இருக்கும்?

வாழ முடியாத ஒரு
வாழ்க்கை பற்றிய
குறிப்புகள் ரணம்
நிறைந்ததாக மட்டுமே
இருக்கலாம்

தோல்வியும் வெற்றியும்
காதலை எப்போதும்
பாதிப்பதில்லை
பாவம் காதலர்கள்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு கலைந்து போனதம்மா

கனவு கலைந்து போனதம்மா
நீ கருக்கட்டி வைத்திருந்த
கல்யாணக்கனவெல்லாம்
கலைந்துதான் போனதம்மா

நீலிக்கண்ணீர்விடும்
நிறையப்பேர் உள்ளார்கள்
போலி ஹாஜிகள் சமூகப்
பொறுப்பற்ற கனவான்கள்
நீலிக்கண்ணீர்விடும்
நிறையப்பேர் உள்ளார்கள்

ஏழை உன் வாழ்வில்
ஏற்றம் காணத்தானே
பாலைவனம் நோக்கி
பறந்தாய் வாழ்வில்
மாற்றம் காணாமலேயே
மௌத்தாகிப் போனாயே

விறகு வெட்டும் தந்தைக்கு
விடுதலை வேண்டியும்
அடுப்பங்கரைக்குள் ஆவியாகும்
உம்மாவை மீட்டெடுப்பதற்கும்
தம்பி தங்கைகளின் கல்விக்காகவும்
வீடு கட்டும் கனவோடும்
மாப்பிள்ளை மாடுகளை வாங்கவும்
மூத்தவள் என்பதாலா
கற்கின்ற வயதிலே
கடல் கடந்து போனாய்

**நாச்சியாதீவு பர்வீன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையாத மனம் கொண்ட
உன் எஜமானிக்கு
ஈவுமில்லை இறக்கமுமில்லை
மன்னிக்க மனமில்லையாம்
இவர்கள் மனிதர்களா?

இதயத்தை பிசைந்தெடுத்த
உன் மரணச் செய்தியால்
மரணித்து போனது
எங்கள் கல்பு

மீளாத்துயரொன்றில்
எம்மை தள்ளிவிட்டு
மீளாத இடம் நோக்கி
சென்று விட்டாய்

றிசானா போய் வா என்று
என்னால் சொல்ல முடியாது
ஏனென்றால் நீ போவது
திரும்ப முடியாத இடத்திற்கு

ஒபாமா உன் வெறிபிடித்த
ஏவுகணை ஒன்றை
சவுதியின் பக்கம் திருப்பிவிடு
உன்னை சிரச்சேதம் செய்ய முடியுமா
அந்த அரபிகளுக்கு என்று பார்ப்போம்

எண்ணெய் வளத்திமிரில்
எகிறிக் குதிக்கும் அராபிகளுக்கு
றிசானாக்களின் வற்றாத கண்ணீர்
ஒரு பாடம் கற்பிக்கும்
ஒன்றில் ஒபாமா மூலம் அல்லது
இன்னொரு ஒசாமாவின் மூலமாக.

**(சவுதியில் மரண தண்டனை வழங்கப்பட்ட சகோதரி றிசானாவுக்காக)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த ஒரு நாள்...

முன்னொரு தடவையிலும்
நான் நினைத்ததில்லை
முன்னர் போலும்
அந்த ஒரு நாள் பற்றி...

எல்லா முனைத்தாக்குதல்களும்
என்னை நிராயுதபாணியாக்கி
பந்தாடிய அவலம்
அந்த ஒரு நாளில் தான்
அரங்கேரியது

முதற்தடவையாக
மிக நீண்ட பிராயத்தனத்தின் பின்னர்
என் காதலுக்கு
சம்மதம் சொன்னாய்
எல்லாம் அழித்து உன்னையும்
தன்னுடனேயே அழைத்துச் சென்றது
அந்த நாள் பற்றி...

என் கண்ணீர்த்துளிகள்
நினைத்துப்பார்க்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைப்பில்லாத என் கவிதை

உயிரின் நிழலில்
கசிந்து உருகும்
காதல் விழிகள்
எங்கு சென்றதுவோ...

வழிகள் தோறும்
காதல் கொடிகள்
விரிந்து கிடந்தன?
ஞாபக வெளியில்...

இதயம் முழுக்க
சுகந்தம் பரவும்
இனிய நாட்கள்
இனிமேல் வருமா?

கைகள் கோர்த்து
கடற்கரை மணலில்
கவிதை படித்து
நடந்த நாட்கள்...

புல்வெளி தோறும்
அமர்ந்த படியே..
திட்டம் போட்டோம்
வாழ்க்கை பற்றி...

மழையில் நனைந்து
இன்பம் நுகர்ந்தோம்.
மாலைதோறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தே திரிந்தோம்...
பட்டுப் பூச்சி
போல நாமும்
சுற்றித்திரிந்தோம்...
சுகமாய் வாழ்ந்தோம்.

யாரின் கண்கள்
நம்மைச்சுட்டது
காதல் கொடிகள்
அறுந்து விட்டது.

ஊரின் நினைவுகள்
உரசும் போதுகளில்
காதல் மனசும்
கண்ணீர் விடும்...

சோகம் நெஞ்சை
துளைக்கும் எனினும்...
தேம்பி அழத்தான்
மனசு துடிக்கும்.

காலக் கதவை
திறந்து பார்த்தால்
கண்ணீர் ததும்பும்.
காதல் கதைகள்...
எனதை உனதை
நமதைப் போல...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவது இதயம்

உன்னிடம் அடைக்கலமாக
இருந்த எனது
இதயத்தை
ஒரு அழுக்குப் பாறையில்
கொழுவி விட்டு நீ ஒதுங்கிக் கொண்டாய்

கறைபடிந்த உன் இதயத்தை
கழுவிக் கொள்ள
ஒரு மூன்றாவது இதயத்தையும்
நீ தேடிக்கொண்டாய்...

கால நெருக்குதலில்
தூவானமிழந்த
மழையினையும்...
ஈரலிப்பில்லா காற்றையும்...
நீ வசமக்கினாய்
இதயத்தின் வெற்று உருவத்தை
சுமந்து பயணிக்கும் நீ
உனக்குரிய குழியை நீயே
தோண்டி அதற்குள் அமர்ந்து கொண்டாய்

நடக்கவே முடியாத நீ
பறக்க ஆசைப்பட்டாய்...
உன் பறத்தல் பற்றிய
ஆசைத்தீயில் அமிழ்ந்து அழுகின்றாய்...

உனக்கு தெரியுமா...
பொய்களும் வஞ்சனைகளும்
என்றும் ஜெயிப்பதில்லை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசமர நிழலில்

அகிம்சையை
புதைத்து விட்டு
ஆட்டம் போடும்
சாதுக்களுக்கு
உரச
இனியாரும் இல்லை
அப்பாவிகளைத் தவிர

அரச அங்கீகாரம்
அடிக்கடி
வெளிநாட்டுப்பயணம்
சொகுசு வாழ்க்கை
சொத்துகள் நூறு இவர்கள்
புத்த பெருமானின்
வாரிசுகளாம்...

212244



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நதிகளின் மரணம்

வேட்டைப்பற்கள் கொண்டு
வெறிபிடித்த வானம்
கீறியது பூமியதை
பூமி கதறி அழுதது
கண்ணீர் எல்லாம்
நதியில் கலந்தன

விஷம் கலந்த
மழையினால்
நதி நஞ்சானது
நதிக்கரைகள்
முதலில் மரித்தன
ஒரு வைகறையில்
நதியின் மரணம்
எழுதப்பட்டது...
இப்படி எல்லா நதிகளும்
மரணித்துப் போயின

நதிகளின் மரணத்தால்
மனிதன் அவதிப்பட்டான்
இன்னும் அவனது அவதி
தீர்ந்த பாடில்லை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மரணம்...

இலையுதிர் காலத்தில்
சத்தமில்லாமல்
உதிரும் ஒரு இலைபோல
எனதுயிரும் ஒரு நாள்
பிரிந்து போகும்
மரங்கொத்திப் பறவைகளின்
டொக் டொக் ஒலியினையும்
சில் வண்டுகளின்
இரைச்சல்களையும்
இன்னும் தேனீக்களின்
ரீங்காரத்தையும்
எனது செவிகள் அப்போது
உணரமாட்டா...
ஒரு அதிகாலையோ
அல்லது
அந்திப்போழுதோ
இல்லை ஒரு கும்மிருட்டோ
எனது உயிர் பிரியும்
நேரமாக இருக்கலாம்
இன்றோ
அல்லது நாளையோ
இன்னும்
சில நாட்களின் பின்போ
எழுதப்பட்ட பிரகாரம்
நான் மரணித்துப் போவது உறுதி
என் மரணம்
உறவுகளுக்கு
இழப்பாகவும்

**நாச்சியாதீவு பர்வீன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்களுக்கு
கவலையாகவும்
என் எதிரிகளுக்கு
சந்தோசமானதாகவும் இருக்கும்
தொலைந்தான் சனியன்
என்று எதிரிகள்
சந்தோசிக்க
இறுமாப்பும் ஆணவமும்
அவர்களுக்குள்
பிரவாகித்து ஓடும்
என் மீது சாமரம்
வீசிய உறவுகள்
என்கபுருக்கு மேலால்
பூமரம் நாட்ட முனைவார்கள்
நண்பர்களோ
என் இழப்பின்
உஷ்ணத்திலிருந்து
வெளிவர முயற்சிப்பார்கள்
ஊரவர்கள்
இன்னொரு மரணம் வரைக்கும்
என்னைப்பற்றி
பேசுவார்கள்
எப்போதும் கண்ணீர் விட்டு
நிரப்ப முடியாத
குவளையொன்றாக
தேம்பித் தேம்பித்
அழும் எனது கவிதைகள்
அதன் மரணம் மட்டும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருங்கை மரத்தின் கடைசி நாள்

முற்றத்தில்
ஒரு முருங்கை மரம்

மனைவியின்
முணுமுணுப்பு
அதை வெட்டச்சொல்லி

மரத்தை வெட்ட
மனமில்லை எனக்கு

அதிகாலை பள்ளி எழுச்சியில்
அணில்களின் ஆலாபனை
அதில்தான் அரங்கேறும்

மைனாக்கள்
கூட்டாக வந்து
கும்மாளமடிப்பதும்
இந்த மரத்தில்தான்

அந்திகளை
அலங்கரிக்கும்
செவ்வானக் கதிர்களை
மரமருகில் நின்று
பருகுவதுண்டு

பச்சைக் கிளிகளின்
பங்காளிச் சண்டைகள்
மரத்தை அவ்வப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலவரப்படுதியதுண்டு
எஞ்சிய உணவு
கிடைக்கும் என்ற நம்பிக்கையில்
தினம் காத்திருக்கும்
இரண்டு நாய்கள்
ஒரு பூனைக் குடும்பம்

ஊர் சுற்றி அலைந்து
களைப்பெடுக்கும்
போதுகளில்
தங்கிச்செல்லும் காகம்

இதனால்
மரத்தை வெட்ட
மனமில்லை எனக்கு

மரமா? மனைவியா?
மனைவிதான் முக்கியம்

ஏன் இந்த மரத்தை
வெட்ட வேண்டும் ?
மனைவியிடம் கேட்டேன்

மயிர் கொட்டி
கூட்டமொன்றைக் காட்டி
"மரியத்தையும் "
"செய்னபையும்"
பாதுகாக்க என்றாள்...

ம்ஹூம் ...
நம் குடும்பத்தை காப்பாற்ற
இன்னொரு குடும்பத்தை
அழிக்க சொல்கிறாள்

அன்று தான்
முருங்கை மரத்தின் கடைசி நாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயி

முளைக்கத் தொடங்கிவிட்டது
நெல்விதை

விதைக்குள் ஒளிந்திருக்கும்
அரிசி மணியில்
யார் பெயர் எழுதப்பட்டுள்ளதோ

அதிகாலை சேவலின்
கூவல் ஒலியில்
கண்விழித்து வயலுக்கு
செல்வான் விவசாயி

கசட்டை சாயமும்
கருப்பட்டித்துண்டுமே
அவனது காலை ஆகாரம்

விதைத்த வயற்பரப்பை
அவன் விழிகள் மேயும்

நிலத்தின் நிலைவரம்
அறிந்தவன் அவன்

அவனின் வியர்வைத்துளி
நிலத்தை பண்படுத்தும்

மண்புழுவைப் போல
நிலமெங்கும் உலவி
பயிரின் வளர்ச்சியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசோதிப்பான்
கிளிகளிடமிருந்தும்
மைனாக்களிடமிருந்தும்
இன்னும் நெற்
குருவிகளிடமிருந்தும்
விதைகளை காப்பாற்றும்
வித்தை தெரிந்தவன்

சேற்றை உண்ண வரும்
காட்டுப் பன்றிகளை
கட்டுப்படுத்தும் “கலை” தெரிந்தவன்

நெல்லுக்குள் ஊடுருவி
வளரும் புல்லுருவிகளை
இனங்கண்டு
இல்லாதொழிக்கும்
சாணக்கியன்

ஒரு கவிஞன் சொன்னான்
விவசாயி ...
சேற்றில் கால்வைக்க வேண்டும்
நாம் சோற்றில் கை வைக்க
உண்மை ...உண்மை

விதை நட்டு
அது கதிராகி
சூடடித்து - நெல்
வீடு வந்து சேரு மட்டுக்கும்
விவசாயி உழைக்கிறான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமில்லா மரம்

முன்னரெல்லாம்
முற்றிப்பழுத்த
பழம் இருந்த காலத்தில்
மரத்தை சுற்றி
மாம்பழத்தான் குருவியும்
பச்சைக்கிளியும்
மஞ்சள் நிரக்குருவிகளும்
இன்னும் பழந்தின்னி
பறவைகள் பலவும்
மரத்திலே முகாமிட்டு
மந்திர ஆலோசனை நடத்தும்

ஒவ்வொரு கிளையையும்
தம் வசமாக்கி
தந்திரமாய் பழம் உண்ணும்
அரசியல் நுணுக்கம்
அந்தப் பறவைகளுக்கு
தெரிந்திருந்தது

மரத்தை குதூக்கலாமாக்கும்
பறவைகளின் கும்மாளத்தில்
அந்தப் பிரதேசமே
கலகலத்துப் போகும்

காலம் நகர
மரம்
மரத்துப்போனது
இலை இழந்து
கிளை இழந்து
கலை இழந்து போனது மரம்

நாச்சியாதீவு பர்வீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடு கட்டி
குடும்பம் நடத்திய
குருவிக்கூட்டம்
அருவிக்கரை நோக்கி
இடம்பெயர்ந்து
சென்றன!

பழமில்லாத காரணத்தால்
பலமிழந்து போனது மரம்

மரத்தை நோக்கிய
பறவைகளின் வரவு
இல்லாமல் போனது

ஒரு பொழுதில்
யாருமற்ற அனாதையாக
தனிமையில்
இருந்தது அந்த மரம்

இன்னொரு
பழ மரம் தேடிப் பறந்த
பறவைகள்
இந்த மரத்தை
மறந்து போயின

மரம் நினைத்துக்கொண்டது
இந்தப்பறவைகளும்
மனிதர்கள் போலவே
ஆகிப்போய் விட்டன என்று...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தப் புளியமரம்

அந்தப்புளியமரம்
இன்னுமிருக்கிறது

வெறிச்சோடிய
நிழலோடு
கம்பீரம் இழக்காமல்
கிளைகள் பரப்பி
அந்தப்புளியமரம்
இன்னுமிருக்கிறது

ஊஞ்சல் கட்டி
ஆடிக்களித்த
கிளைக்கொப்பை
இழந்து போய்
விட்டிருந்தது
அந்தப்புளியமரம்

குட்டான் சோறாக்கி
கும்மிடு பூச்சி விளையாடி
சிட்டுக்குருவிபோல
ஆடிக்களித்த
விரிந்த நிழல் பரப்பு
இன்றுகளில்
கலை இழந்து காணப்படுகிறது

முச்சந்தியில்
அந்தப்புளியமரம் இருந்ததனால்
இளசுகளின் மாநாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்திகளிலும்
பெருசுகளின் கூட்டணி
அவ்வப்போதும்
மரத்தைச் சுற்றி
மணக்கும்

அமர்ந்து கதை பேச
யாரோ அமைத்து வைத்த
தென்னங் குற்றி கால்கள் கொண்ட
பலகை இருக்கை
இன்றில்லை துருப்பிடித்த
ஆணிகள் மட்டுமே
இருக்கை இருந்ததனை
உறுதிப்படுத்துகின்றன

கூடாரமடித்து
வெள்ளைக் கொக்குகளின்
குடும்ப வாழ்க்கை அரங்கேறும்
கொக்குகளின் உலகம்
அந்தப்புளியமரம்

ஊர் சங்கதிகள்
சந்திக்கு வருவது முதலாவது
இந்த சந்திதிப் புளிய
மரத்தடியில் தான்

ஊர் உறங்கிப்போன பின்னும்
ஊர்க்கதை பேசிக்கொண்டே
இந்த மரத்தடியில்
காலம் கடத்தும்
எந்தக்கூட்டமும் இப்போது
இங்கில்லை

பக்கத்து வளவில்
விளையாடும் சடுகுடு ஆட்டம்
சிலநாட்களில் கிட்டிப்புள்ளு
இன்னும் சிலநாட்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளித்தட்டு
இப்படி நாளொரு விளையாட்டையும்
ரசிக்க புளிய மரத்தடியில்
கூட்டம் கூடும்

இப்படியான
புளியமரத்தடியின்
கலகலப்பு
இப்போதுகளில்
கலைந்து களை இழந்து
போய்க்கிடக்கிறது
அந்தப்புளியமரம்

அவ்வவ்போது
கொக்குகள் மட்டுமே
வழமைபோல கூடு கட்டி
குடும்பம் நடத்தி
குஞ்சு பொரித்து
காலம் கடத்துகிறது
எந்த மனிதனும்
அந்தப் புளியமரத்தை
அண்டுவதில்லை
அதில் பேய் வாழுவதாய்
பேசிக்கொள்கிறார்கள்

உங்கள் ஊரிலும்
ஒருமரம்

மாவாய்
புளியாய்
பலாவாய்
ஆலமாரமாய்
கடந்த காலத்தை
சுமந்து கொண்டு இருக்கலாம்

பாவம் அந்தமரம்
கொஞ்சம் பாசம் காட்டுங்கள்.

**நாச்சியாதீவு பர்வீன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றைப்பனை

ஊரின் ஒதுக்குப்புறம்
இருந்தது அந்த ஒற்றைப்பனை

கிராமம் முன்னேறி
நகரமாக உருமாறியும்
முடுக்குப்பனையில்
முன்னேற்றமில்லை...

முன்னர் ஒரு பருவம்
அதிகாலை தொழுகையின் பின்னர்
பனம்பழம் பொறுக்கும் ஆர்வத்தில்
மரத்தை சுற்றி வட்டமிடுவதுண்டு

நொங்கு வெட்டி
ருசி பார்த்து
விடுமுறைகளை
பனையோடு கழித்ததுமுண்டு

பனைமட்டை கரத்தை
நொங்குக் கரத்தை
அந்த வயதில்
மண் தெருக்களில்
புழுதி கிளப்பும்

பனம் ஓடியல்
திண்ணும் போதுகளில்
இந்த ஒற்றைப்பனையின்
ஞாபகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடறுக்கும் நெஞ்சில்
எத்தனை வயதிருக்கும்
இந்தப்பனைக்கு கிழடு தட்டி
ஆயுளின் அந்திமத்தில்
வாழ்கிறது இந்தப்பனை

மைனாக்களின் மாளிகைகளும்
கிளிகளின் அரண்மனைகளும்
இந்தப்பனையை இன்னும்
உயிர்ப்பிக்கின்றன

ஊர் சுற்றிக்காகமும்
உல்லாச குருவிகளும்
மொட்டைப்பனையின்
தலையில் அவ்வப்போது
தங்கிச்செல்லும்

ஒற்றை மரம்
ஒன்றுக்கும் உதவாது
மனிதனின் நினைப்பில்
மண்ணள்ளிப் போட்டது
பறவைகளின் பகவத் கீதை

பருந்து ஒன்றின்
பகல் போசனம்
மரத்தின் உச்சியில் பரிமாறப்படும்

பனை இறந்து கொண்டே
உதவுகிறது
மனிதன் இருந்து கொண்டே
உதைக்கிறான்

ஒரு அந்தி
பனையின் பக்கத்தில் நான்
ஒரு நூறு கதைகளோடு
பனையின் முனங்கள்

மனிதன் சுயநலக்காரன்
.................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றை இரவும் ஊமைக் காதலும்

இந்த நாட்களின்
நடு நிசிப் பொழுதுகளில்
தூக்கம் பிடிக்காமல்
உருண்டு கொண்டிருக்கிறேன்
ஒரு தூக்கு தண்டனை
கைதிபோல

கடந்த பல
இராக்களில்
என் விழிகள்
நித்திரை இழந்து
தவித்ததை - நீ
அறிய வாய்ப்பில்லைதான்

மெத்தையின்
கதகதப்பில்
மேனி சாய்ந்திருந்தாலும்
மனசில் ஒட்டியிருந்த
உன் உருவம்
மண் புழுவாய்
எனக்குள் நெளிகிறது

சலனமற்ற
இந்த இரவில்
உன் சங்கீதப் பெயரை
சத்தம் போட்டு கூவிட
ஆயிரம் தடவைகள்
நினைத்ததுண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் வீடு வரைக்கும்
வந்து நின்று
விடியும் வரைக்கும்
தவமிருக்க
நினைத்ததுண்டு
பைத்திய கார
பக்தனைப்போல

என் நித்திரை
விழுங்கப்படும்
இந்த நிசிகளில்
என் ஆயுளும் கரைகிறது
ஒரு பனிக்கட்டி போல

குளிர் கொல்லும்
இந்நிசியில்
என் பெருமூச்சின் உஷ்ணத்தில்
நெருப்புச்சுவாலைக்கு
கரிந்து போகும்
பச்சை இலைகளைப்போல
நானும் துவண்டு போகிறேன்

ஒரு வேளை
இந்த இரவில்
நீ கவலைகள் அற்றவளாய்
தூங்கிக்கொண்டு இருப்பாய்
ஆனால்
நானும் என் ஊமைக் காதலும்
இந்த ஒற்றை இரவின்
ஓரம் நெடுகிலும்
உருண்டு கொண்டு தான் இருப்போம்
உன் நினைவுகளில் ...
மிதந்த வண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொல்லாத கலகக்காரன்

திறந்திருந்த
குசினிக்கதவால்
கள்ளன் போல
நுழைந்து
காய்ச்சல் மேனியை
கதகதப்பாக்கியது
குளிர் காற்று
காய்ச்சல் ஒரு
கலகக்காரன்
முழு குடும்பத்தையும்
முத்தமிட்டு விட்டான்
இப்போது என்னோடு
ஒட்டிக்கொண்டு
விலக மறுக்கின்றான்

இவனது அழிச்சாட்டியம்
தாங்க முடியவில்லை
நண்பர்களோடு பேச
முடியவில்லை
நா ருசிக்க உண்ண
முடியவில்லை
மூத்தவள் மரியத்தை
முத்தமிட முடியவில்லை
இளையவள் சைனப்பை
தூக்கவும் உலாத்தவும்
முடியவில்லை

காணாக் கொரக்கி

242244



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் கூட்டாளிகளின்
கொலைவேறித்தனம்
தடிமன் என்ற தடியன்
மூக்கில் ஏறிகுந்திக்கொண்டு
முரண்டு பிடிக்கின்றான்
"சளி" அடிமைபோல
ஒட்டிக்கொண்டு
அகழ மறுக்கின்றான்
வைத்தியர் சொல்கிறார்
ஊரெல்லாம்
இந்தக் கலகக்காரன்
உலா வருகிறானாம்
இவன் பொல்லாத
கலகக் காரன்
பொல்லெடுத்து அடித்தாலும்
போக மறுக்கின்றான்
இருமல் குக்கல்
இன்னும் பல
இவனது கூட்டாளிகளும்
அவ்வப்போது
தலைகாட்டி
செல்கின்றனர்

இவன் ஒரு பொல்லாத
கலகக்காரன் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு துயரத்தின் மொழி

ஒரு துயரத்தின்
மொழி பற்றிய
குறிப்புகள் அற்ற
வெளி நெடுகிலும்
ஏன் பயணம் தொடர்கிறது...

சிவந்து மங்கும்
வானத்தின்
துயரம் பற்றிய
அடையாளம்
எந்த ஏட்டிலும்
குறிப்பிடப்படவில்லை

முடிந்தால்
எல்லாம் செய்து விட்டு
தப்பித்துக் கொள்

வெறித்த நினைவுகளை
அசைபோட்டு
கவலைப்பட...
இப்போதுகளில் அவசியமில்லைதான்

கொடூரங்களின் புதையலை
உனக்குள் வைத்து
ஆராதனை செய்...

எல்லாம் முடிந்த
ஒரு நாளின்
மௌனத்திரை வழியே...
நீ காண்பாய் உன் சுயத்தை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியன் பற்றி...

தனது வெள்ளிக்கதிர்களை
பாய்ச்சிய வண்ணம்
எங்கள் ஊர் குளத்தின்
கிழக்குப்புறமிருந்து...
அவன் எழுந்தான்...

எல்லாவற்றையும்
விழுங்கி ஏப்பமிடும்
கொடூரப்பார்வை
அனலாய் இறங்கியது
பூமியில்

அவன் வேலைக்குப்
புறப்பட்டு விட்டான்
எந்த மனிதனின்
அதட்டல் குரலோ
அல்லது கட்டளைகளோ
அவனை
எதுவும்
செய்துவிடாது...

உலகை சுற்றி
வருவதும்...
ஒளி பாய்ச்சி
உயிர் கொடுப்பதும்
இன்னும் பலதும்
அவனது
அன்றாட கருமங்கள்

**நூர்ச்சியாதீவு பர்வீன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நாளும்
உயிர்த்தெழும் அவன்
அதே நாள் பின்னேரம்
எங்கள் ஊரின்
மேற்குப்புற
வயல்வெளிகளில்
காணாமல்
போய்விடுகிறான்

விஞ்ஞானம்
என்ன சொன்னாலும்
ஒரு கிராமத்து சராசரி
மனிதனின் நினைப்பு
இப்படித்தான் இருக்கிறது..
சூரியன் பற்றி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னொரு நிஜம்...

துயரம் மறந்த
ஒரு அழகான மாலையில்
மீண்டும் அவளைக் கண்டேன்..

கால்களின் நடுக்கமும்
நெஞ்சின் பரபரப்பும்
கண்களில் ஏக்கமும்...
என்னையும் அறியாமல்
மீண்டும் உருவாகின.

ஏதாவது பேச வேண்டும்
என்ற எனது...
எத்தனிப்பை
அவள் கணவனின் வருகை
தடுத்து விட்டது...

பத்தாண்டுகள்
கழிந்த பின்னும்
இன்னும் முதலாவது
சந்தித்த அதே நிலைதான் எனக்கு...

பூமியை வெறித்துப் பார்த்துவிட்டு
யாருக்கும் தெரியாமல்
கண்ணீர்த் துளிகளை
துடைத்த வண்ணம்
வீட்டை நோக்கியதாய்
நகர்கிறேன்...
காதலுடன்.

நாச்சியாதீவு பர்வீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யதார்த்தத்தின் கோடுகள்

எச்சில் விழுங்கி
பத்திரப்படுத்தும்
நிஜம்பற்றிய குறிப்புகளை
என்றாவது ஒருநாள்
அவன் அறியக் கூடும்

என் பழைய டயரிக்குறிப்புகள்
அல்லது என் பாடசாலை
புத்தகங்களின் கடைசிப்பக்கம்
அல்லது வேறு ஏதாகிலும்
ஒருவகையில்...
எனதான காதலின்
நிஜத்தை அறியக்கூடும்

பிள்ளை பெற்றுக்கொள்ளவும்
அவனது ஆடைகளை
துவைக்கவும்
அடுக்களைகளில் மாடு போல
உழன்றும்...
இன்னும் இரவுகளில்...
அவனது... ஆசைகளை...
நிறைவேற்றவும் மட்டுமே
நான்... என்ற அவனது
எடுகோள் மாறிப்போகும்
எனக்கும் இதயம்
இருக்கிறது என்ற மெய்
புலப்படும் போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பைகள்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

குப்பைகளில்
இருப்பதெல்லாம் கழிவுகள் தான்
எல்லாக் கழிவுகளும்
குப்பையில் இடம் பெரும்

கழிவு இல்லாத
கழிவென்று கருதப்படும்
சிலவும் குப்பையை
நிறைத்திருக்கும்

ஆடுகள் மாடுகள்
இன்னும் பலவும்
குப்பையை கிளறி
உணவு தேடும்

குப்பையைக் கிண்டி
உணவு தேடாத
கோழிகள் இல்லை எனலாம்

அநேகமான
பிராணிகள்
குப்பையில் தான்
வாசம் செய்கின்றன
புழு பூச்சி...
இன்னும் ஊர்வன
வாழுமிடம்தான்
குப்பை



நாச்சியாதீவு பர்வீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப்பை
நறுமணமற்றது
மனிதர்களின்
வெறுப்புக்குரியது

குப்பை அள்ளி வாழ்க்கை
நடத்தும் மனிதர்களை
யாரும்
மதிப்பதில்லை

குப்பைக்குள் ஈரம்
உண்டு
மனிதனுக்குள் ...?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் எதிரிகளுக்கு

என் எதிரிகளுக்கு
உங்கள் சுடு சொற்கள் எதுவும்
என்னை சுட்டுப் பொசுக்கி
சாம்பலாக்கி விடாது
இறைவனின் நியதியை
உங்களின் பொறாமையும்
பொல்லாமையும்
எப்போதும் வென்று விடாது
நெஞ்சுரமும் நேர்மையுமற்ற
உங்கள் செயற்பாடுகள்
எனது பயணப்பாதையில்
என்னை ஒரு போதும்
தடுத்து நிறுத்தமாட்டா
இன்னும் நான்
எனது கிராமத்தை
வெகுவாக நேசிக்கின்றேன்
அதில் வசிக்கின்ற
அப்பழுக்கற்ற
அப்பாவிகளையும்
நேசிக்கிறேன்
உங்கள் மீதான
எனது வெறுப்பானது
நியாயமற்றது என்று
நீங்கள் நினைக்கலாம்
ஏதுமறியா அப்பாவிகளை
ஏமாற்றி வாழ்க்கை நடத்தும்
உங்கள் ஏகாதிபத்தியத்தின்
எதிரி நான்...

**நாச்சியாதீவு பர்வீன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாடம் காய்ச்சிகளிடம்
பணம் பறிக்கும்
உங்கள் அயோக்கியத்தனத்தை
என்னால் அங்கீகரிக்க முடியாது
உங்களின் வாளின்
கூர்மைக்கு எனது கழுத்தை
தாரை வார்க்கவும்
உங்கள் துப்பாக்கி ரவைகளுக்கு
எனது நெஞ்சை பரிசளிக்கவும்
எப்போதும்
நான் தயாராகவே உள்ளேன்
நயவஞ்சகர்களான உங்களோடு
சமரசம் செய்து கொள்வதைக்காட்டிலும்
அதற்குப் பகரமாய் என் உயிர்
பறிக்கப்படுவதை
நான் மிகவும் விரும்புகிறேன்
வேஷம் போடும் விஷமிகளே
விஷத்தை நாக்கினிலும்
தேனை நாவினிலும்
தேக்கி வைத்து
தேவாரம் பாடுகிறீர்கள்
ஏழை கைம்பெண்
இன்னும் பாதிக்கபட்டோரின்
புகைப்படங்களை
அரேபியாவுக்கு ஏற்றுமதி செய்து
சேக்குகளிடமிருந்து
செக்குகளை இலாவகமாய்
வாங்கி வந்து இங்கு
உங்கள் வங்கிக் கணக்கை நிரப்பி
சுகபோக வாழ்க்கை நடத்துகிறீர்கள்
உங்கள் பணத்திற்க்காக
வாலாட்ட
உங்களை புகழ
அநேகர் உள்ளார்கள்
என்னிடம் எதிர்பார்த்து
ஏமாந்து போனீர்கள்
அந்தக் கடுப்பு புரிகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்தின் நாட்கள்
உங்களையும் என்னையும்
இன்னும் உங்கள் கூட்டத்தையும்
நெருங்கிக் கொண்டுதான் இருக்கிறது
நீங்கள் தங்கத்தட்டில் உண்ணலாம்
விலை உயர்ந்த துணிகளை
அணியலாம்
சொகுசு பங்களாக்களில் வாழலாம்
அதி சொகுசு வாகனங்களில்
பயணிக்கலாம்

ஆனால்
நம் மரணத்தின் பின்
அதே சந்தூக்கில் தான்
நாம் தூக்கிச்செல்லப்படுவோம்
ஆறடி அறையில் தான்
அடக்கம் செய்யப்படுவோம்
நீங்கள் என் பரம்பரை எதிரியல்ல
ஆனாலும் எதிரிகள்
மக்களை காட்டி
பிச்சை எடுப்பதை நிறுத்துங்கள்
மகான் வேஷம் போட்டு
காய் நகர்த்தும் உங்கள்
காவாலித்தனதை நிறுத்துங்கள்
பொறுக்கிகளான உங்களை
நான் வெறுத்தாலும்
பொறுக்க முடியாத வேதனை
நம்மூர் தெருக்களில் நடக்கையில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசா பள்ளத்தாக்கின் குருதி சிந்தி வாழ்விழக்கும் ஒரு சகோதரனுக்கு ...?

சகோதரனே
உன் மீது சாந்தி
உண்டாகட்டும்
என் கனவுகளில்
உன் நினைவுகள் வந்து
என் கையாலாகாத்தனத்தை
கேலி செய்கிறது
உன் குருதிச் சொட்டுக்கள்
வீணாய்ப் போய் விடாது
என் பலஹீனமான ஈமான்
இன்னும் வாய் பொத்தி கை கட்டி
நம் எதிரிகளுக்கு முன்னால்
அடிமையாகவே என்னை
இருத்தி வைத்துள்ளது
நும்ரூத்தை கொன்றொழித்த
ஈக்களையும் அல்லது
அப்ரஹாவை இல்லாமலாக்கிய
யானைப்படையும் அல்லது
இன்னும் ஏதாவது ஒன்றின் மூலமான அழிவு
நம் எதிரிகளுக்கு வரும் - எப்போது ?
கலிமா சொன்ன காரணத்தினால்
நம் துயர் துடைக்க எந்த சியோனிச சக்திகளும்
வர மாட்டா - மாறாக
பள்ளத்தாக்குகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிருடன் நம்மை புதைத்து
வெறி தீர்த்துக்கொள்ளும்
அந்த அரக்கர்களின் கரங்கள்
சைத்தூன் மர நிழலில்
தம்பி தங்கைகளுடன் மண் வீடு கட்டி
விளையாட முடியாத உனது நிலை பற்றி
நான் அறிய வாய்ப்பில்லை
காசா பள்ளத்தாக்கின் தூசுகளுக்குள்
அடைந்து கிடக்கும் உன் கவலை பற்றி
யாதொன்றும் அறியா தூரத்தில் நான்
நாம் அனுபவிக்கும் துயரங்கள்
எப்போது தீரும் - உன்னைப்போலவே
எனக்குள்ளும் எழுகின்ற கேள்வி
அடிவானத்தின் முகடுகளுக்குள் விழுந்து
காணமல் போய் விடுகிறது...
பொறுத்திருப்போம் சகோதரா...
சகாரா பாலைவனம் கடந்து வரும்
ஒரு ஒட்டகை கூட்டத்து வீரர்களுக்காக
அல்லது நைல் நதி தாண்டி உன்னை காக்க வரும்
உண்மையான போர் வீரனுக்காக...
அங்கேயும் இங்கேயும்
நம்மவர்கள் காட்டிக்கொடுக்கப்படுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரின் பிற நூல்கள்

1. சிரட்டையும் மண்ணும்
- கவிதைத்தொகுதி -

2. பேனாவால் பேசுகின்றேன்
- பத்தி எழுத்து -

3. மனவெளியின் பிரதி
- கவிதைத்தொகுதி -

262244



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யதார்த்தத்தைப் பதிவுசெய்யும் எழுத்தாளன்

இன்றைய இளைய தலைமுறைப் படைப்பாளிகளில் பல்துறைப் படைப்பாற்றல் கொண்டு இலக்கிய உலகில் தம்மை நிலைபெறச் செய்துகொண்ட வெகுசிலரில் கவிஞர் நாச்சியாதீவு பர்வீன் முக்கியமானவர். எம்.எச்.எம்.ஸம்ஸ் என்னும் ஆற்றல்மிக்க ஒரு கலை இலக்கியக் கர்த்தாவால் தினகரன் நடாத்திய 'புதுப்புனல்' கவிதைப் பந்தலில் இனங்காணப்பட்டு வளர்க்கப்பெற்றவர் புதுப் புனலுக்கு முன்னமே 1992 களில் மானாமக்கீனின் 'லைட்ரீடிங்' இல் தனது எழுத்துப்பயணத்தை இவர் ஆரம்பித்தாலும் இவரை பட்டை தீட்டி பண்படுத்தியது 'புதுப்புனல்' எனலாம். ஒரு இளங் கவிஞனாய் முகிழ்ந்து. இன்று கவிதை. சிறுகதை. பத்தி எழுத்து. சிறுவர் இலக்கியம். கட்டுரை என தமிழ் இலக்கியத்தின் பல்பட்ட பரிணாமங்களில் தன் திறமையை வெளிப்படுத்தி வருகின்றார். இது நாள்வரை சிரட்டையும் மண்ணும் (கவிதை) பேனாவால் பேசுகிறேன்(பத்தி எழுத்து). மனவெளியின்பிரதி(கவிதை) ஆகிய நூல்களையும் பதிப்புருவில் கொணர்ந்து அவற்றிற்காகப் பல பரிசில்களையும் தனதாக்கிக்கொண்டவர். சுயநலமற்ற சமூக உணர்வோடு. யதார்த்தத்தைப் தனது இலக்கிய ஆக்கங்களில் பதிவு செய்யும் கவிஞர் நாச்சியாதீவு பர்வீனின் படைப்புக்கள். இன் றைய நிகழ்வுகளின் எதிர்காலத்திற்கான ஆவணங்களாகும். தெள்ளிய தமிழ்நடை. இருள்மையற்ற. பாமரர்களுக்கும் புரியும் வாகான தெளிவான சொல்லாட்சி. சிறுமைகண்டு சீறும். சத்தியத் திற்குக் குரல்தரும் நேர்மையான ஆவேசம் என்பன நாச்சியாதீவு பர்வீனின் எழுத்துக்கான இனங்காணல். தொடர்ந்தியற்றும் இலக் கியப் பணிகளுடன். சமூகப் பணிகளிலும் தன்னை அர்பணித்துச் செயற்படும் நாச்சியாதீவு பர்வீனின் செயற்பாடுகள் அவரது எழுத் துத் தூய்மைக்கு எடுத்துக்காட்டாகும் இவரது எழுத்துப்பணியை கௌரவித்து அகில இலங்கை சிங்கள கவிஞர் சம்மேளனம் இவரை பாராட்டி கௌரவித்தது. இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தின் நிருவாக உறுப்பினர்களில் ஒருவராக இருப் பதோடு.அனுராதபுர தமிழ் இலக்கிய மன்றத்தின் தலைவராகவும் இவர் செயற்படுகிறார். தான் வாழ்புலத்திலும் பல அமைப்புக் களிலும் தலைமைப் பொறுப்போடு இலக்கிய. சமூகப் பணி களிலும் முன்னின்று உழைக்கும் இவரது பணி தொடர வேண்டும் என ஆசித்து அவரை நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

'காப்பியக்கோ' ஜின்னாஹ் ஷரிபுத்தீன்
(தலைவர்-இஸ்லாமிய இலக்கிய ஆய்வகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org